ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ குன்றமொன்றெடுத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ குன்றமொன்றெடுத்து ॥

தலைவியிரங்கல் - 1

‡குன்றம் ஒன்றெடுத்தேந்தி⋆ மா மழை
அன்று காத்த அம்மான்⋆ அரக்கரை
வென்ற வில்லியார்⋆ வீரமே கொலோ⋆
தென்றல் வந்து⋆ தீ வீசும் என் செய்கேன் (1)

காரும் வார் பனிக்⋆ கடலும் அன்னவன்⋆
தாரும் மார்வமும்⋆ கண்ட தண்டமோ⋆
சோரு மாமுகில்⋆ துளியின் ஊடு வந்து⋆
ஈர வாடை தான்⋆ ஈரும் என்னையே (2)

சங்கும் மாமையும்⋆ தளரும் மேனிமேல்⋆
திங்கள் வெங்கதிர்⋆ சீறும் என்செய்கேன்⋆
பொங்கு வெண் திரைப்⋆ புணரி வண்ணனார்⋆
கொங்கலார்ந்த தார்⋆ கூவும் என்னையே (3)

அங்கோர் ஆய்க்குலத்துள்⋆ வளர்ந்து சென்று⋆
அங்கோர் தாய் உருவாகி வந்தவள்⋆
கொங்கை நஞ்சுண்ட⋆ கோயின்மை கொலோ⋆
திங்கள் வெங்கதிர்⋆ சீறுகின்றதே (4)

அங்கோர் ஆள் அரியாய்⋆ அவுணனைப்
பங்கமா⋆ இரு கூறு செய்தவன்⋆
மங்குல் மா மதி⋆ வாங்கவே கொலோ⋆
பொங்கு மா கடல்⋆ புலம்புகின்றதே (5)

சென்று வார்⋆ சிலை வளைத்து⋆ இலங்கையை
வென்ற வில்லியார்⋆ வீரமே கொலோ⋆
முன்றில் பெண்ணைமேல்⋆ முளரிக் கூட்டகத்து⋆
அன்றிலின் குரல்⋆ அடரும் என்னையே (6)

பூவை வண்ணனார்⋆ புள்ளின்மேல் வர⋆
    மேவி நின்று நான்⋆ கண்ட தண்டமோ⋆
வீவில் ஐங்கணை⋆ வில்லி அம்பு கோத்து⋆
    ஆவியே இலக்காக எய்வதே (7)

மால் இனந் துழாய்⋆ வரும் என் நெஞ்சகம்⋆
    மாலின் அந்துழாய்⋆ வந்தென்னுள்புக⋆
கோல வாடையும்⋆ கொண்டு வந்ததோர்⋆
    ஆலி வந்ததால்⋆ அரிது காவலே (8)

கெண்டை ஒண் கணும் துயிலும்⋆ என் நிறம்
    பண்டு பண்டு போலொக்கும்⋆ மிக்க சீர்
தொண்டர் இட்ட⋆ பூந் துளவின் வாசமே⋆
    வண்டு கொண்டு வந்து⋆ ஊதுமாகிலே (9)

‡அன்று பாரதத்து⋆ ஐவர் தூதனாய்⋆
    சென்ற மாயனைச்⋆ செங்கண் மாலினை⋆
மன்றிலார் புகழ்⋆ மங்கை வாள் கலி-
    கன்றி⋆ சொல் வல்லார்க்கு⋆ அல்லல் இல்லையே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥